இணைந்த சேவைகள் சுற்றறிக்கை: 02/2013

எனது இல: PA/CS/6/4/
வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை
அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

23.09.2013

சகல அமைச்சுக்களினதும் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்
மாவட்ட/பிரதேச செயலாளர்கள்

**<u>அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் வகுப்பு III இலுள்ள அலுவலர்களுக்கான வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை</u>**

நியமனத் திகதியிலிருந்து நான்கு தொடர்ச்சியான பரீட்சைத் தவணைகளில் வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையினைச் சித்தியெய்துவதற்காக, 2007.12.10 மற்றும் 2008.09.01 ஆம் திகதிகளில் அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையின் வகுப்பு III இற்கு நியமிக்கப்பட்ட அலுவலர்களுக்கு, அவ் அலுவலர்களிற்கான வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையானது உரிய வேளையில் நடாத்தப்படாமையினால் சலுகைக் காலம் ஒன்றினை வழங்குவதற்கு அரச சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

| பரீட்சைத் தவணைகள் | நியமனத் திகதி | சலுகைக் காலத்திற்காகக் கவனத்திற்கொள்ளப்படும் பரீட்சைகள் நடாத்தப்பட்ட திகதிகள் | நியமனத் திகதி | சலுகைக் காலத்திற்காகக் கவனத்திற்கொள்ளப்படும் பரீட்சைகள் நடாத்தப்பட்ட திகதிகள் |
|---|---|---|---|---|
| 1 | 10.12.2007 | 30.08.2008 | 01.09.2008 | 26.07.2009 |
| 2 | | 26.07.2009 | | 17.07.2010 |
| 3 | | 17.07.2010 | | 01.10.2011 |
| 4 | | 01.10.2011 | | 27.01.2013 |

02. அதற்கிணங்க, மேற்படி திகதிகளில் நியமிக்கப்பட்ட அலுவலர்கள் 04 பரீட்சை தவணைகளிற்குள் வினைத்திறன் தடைதாண்டற் பரீட்சையினை பூர்த்திசெய்திருப்பின் சம்பள ஏற்றங்கள் நிறுத்தி வைக்கப்படமாட்டாது என்பதுடன் அப் பரீட்சையினைப் பூர்த்தி செய்யாத அலுவலர்களின் தகுதிகாண் காலமானது அவர்கள் வினைத்திறன்காண் தடையினை பூர்த்திசெய்யும் வரை நீட்டிக்கப்படும்.

03. மேலும் மேலே 02 இலுள்ளவாறு வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையினை சித்தியடையும் அலுவலர்களின் தகுதிகாண் காலப்பகுதியினையும் அவர்களின் சம்பள ஏற்றங்கள் நிறுத்திவைத்தலினையும் திருத்துவதற்கு நிறுவனத் தலைவரினூடாக கோரிக்கைகளை அனுப்புமாறு அறிவிக்கப்படுகின்றது.

கே.வீ.பி.எம்.ஜே. கமகே
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்